ஆவடி தொகுதி திருநின்றவூர் நகராட்சிகுட்பட்ட

# 10 இடங்களில் 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய மின்மாற்றி!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், செப். 17;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதி குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி 10, 8 , வார்டுகளில் அதிக மின்னழுத்தம் குறைவாக உள்ளதால் அப்பகுதி பொதுமக்கள் கூடுதல் மின் மாற்றி வேண்டுமென்று முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு.நாசரியிடம் கோரிக்கை வைத்தனர் இதை தொடர்ந்து சம்பந்தப்பட்ட மின்துறை அதிகாரி தொடர்பு கொண்டு புதிய மின்மாற்றி வேண்டுமென்று கோரிக்கையை முன் வைத்தனர் அதனை தொடர்ந்து 10 வார்டு பிரகாஷ் நகரில் 8 வது வார்டு திருமலா நகரில் 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய 10 மின்மாற்றிகளை அமைக்கப் பட்டு இந்நிலையில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறப்பு விழா நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம். எல்.ஏ தொடங்கி வைத்தார் அப்போது அப்பகுதி மக்கள் உடனடியாக புதிய மின்மாற்றிகளை அமைத்து தந்ததற்காக கழகத் தலைவர் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் நாசர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் இந்நிகழ்ச்சியில் திருநின்றவூர் நகரக் கழக செயலாளர் தி.வை.ரவி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், பொதுக் குழு உறுப்பினர் விமல் வர்ஷன், மின் துறை அதிகாரிகள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரே ஷ்குமார், நகர் மன்ற உறுப்பினர் உஷாராணி வெங்கடேசன், நகர நிர்வாகிகள் அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், ரவி வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் துர்கா பிரசாந்த், மின் துறை அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்கள்

பகுதிச் செயலாளர் சொ.வேலு முன்னிலையில்

# 77 வது வட்டத்தில் கழக முப்பெரும் விழா! கொடியேற்றல் !

## கோ.ஏகப்பன், எஸ். மணிமுடி பங்கேற்பு!

சென்னை செப்:17

சென்னை கிழக்கு மாவட்டம்,மாவட்ட கழக செயலாளர்,அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆலோசனைப்படி எழும்பூர் வடக்கு பகுதி, 77 வது வட்டத்தில் கழக முப்பெரும் விழா மற்றும் பவள விழாவை முன்னிட்டு, வட்டக் கழகச் செயலாளர் தயாளன் ஏற்பாட்டில் கழக கொடிகம்பங்களில் கொடியேற்றும் நிகழ்ச்சி இன்று 17.9.2024 காலை நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பகுதி கழகச் செயலாளர், சென்னை மாநகராட்சி நியமனக்கழு உறுப்பினர் சொ.வேலு முன்னிலையில் வகிக்கிறார்.

நிகழ்ச்சிகளில் மாவட்ட அவைத் தலைவர் கோ. ஏகப்பன்,எஸ்.மணிமுடி, எம்.ஆர். வெங்கடேசன் கோ.மணி, பெ.ஏழுமலை ஆகியோர் கழக கொடி கம்பங்களில் கொடியேற்றுகின்றனர்.

இதில் வட்டத்திற்குட்பட்ட மாநில,மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடி கள்,மகளிர் அணியினர் கலந்து கொள்கின்றனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டை எம்.ஐ.டி. கல்லூரியில் இருந்து 5 கிலோ மீட்டருக்கு இயற்கை சுகாதாரம், இயற்கை தூய்மை என்ற நோக்கில் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது. போட்டியை நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். முதல் மூன்று இடத்தை பிடித்தவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழுத் தலைவர்கள் இ.ஜோசப், அண்ணாதுரை, வே.கருணாநிதி, இந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் இருந்தனர்.





திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பபூண்டி கிழக்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர்.ந.பரிமளம் வரவேற்புரையில் கே.என்.பாஸ்கர், வி.எம்.சுகு, எம். ஜெயசந்திரன், ஆர்.எஸ்.காளத்தி, எஸ்.ராமஜெயம். ஆர்.எம்.ரவி முன்னிலையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மு.கதிரவன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன் மாநில நிர்வாகி சி.எச். சேகர், ஒன்றிய செயலாளர் ஆ.சத்தியவேலு மாவட்ட அணிகளின் அமைப்பாளாகள்மு .பாஸ்கரன், என். கிருஷ்ணமூர்த்தி. கே.ஆறுமுகம், ஏ.கே.சம்பத்குமார், மாவட்ட அணிகளின் துணை அம்பாளர்கள் டி.ஜெ.ஜி. தமிழரசன், வெ.அரிதாஸ், கே.சி.ராஜா, ஏ.பழனி, யு.சித்திக், சுந்தரிஅன்பு, வி.வி.சேகர், ஆர்.சிவக்குமார். பி.அறிவழகன், இ.கோகுல்நாத், பி.கௌரிசங்கர், ச.தியாகராஜன், ஆர்.கே.சரண்ராஜ் எஸ்.எம்.திருநாவுக்கரசு, ஜி.இளவரசன், நரேந்திரன் மற்றும் கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றிய கழக முன்னோடிகள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கும்முடிப்பூண்டி பேரூராட்சி கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள், கும்முடிப்பூண்டி பேரூர் கழக முன்னோடிகள், கும்முடிப்பூண்டி கிழக்கு ஒன்றிய திமுக ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். முடிவில் ஒன்றிய பொருளாளர் சரவணன் நன்றி கூறினார்.

சென்னை 4வது மண்டலத்திற்குட்பட்ட ஆர்.கே.நகர் - பெரம்பூர் பகுதிகளில் உள்ள

# 15 வார்டுகளுக்கான மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## நேதாஜி யு.கணேசன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப்.16-

சென்னை மாநகராட்சி நான்காவது மண்டலத்திற்கு உட்பட்ட ஆர்.கே.நகர், பெரம்பூர், ஆகிய பகுதிகளில் உள்ள 15 வார்டுகளுக்கான மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமை வகித்தார். மண்டல அதிகாரி விஸ்வநாதன் முன்னிலை வகித்தார். இதில் திமுக, கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது ஒவ்வொரு மாமன்ற உறுப்பினரும் தங்கள் வார்டு பகுதியில் நடைபெற வேண்டிய திட்டங்கள் குறித்து பேசினர்.

மேலும் நடைபெறாமல் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்கவும் கோரி க்கை வைத்தனர். அதனை விரைந்து முடித்து தர கூறி அதிகாரிகளுக்கு மண்டல குழு தலைவர் உத்தரவிட்டார்.

மேலும் 5 கோடியே 64 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 70 தீர்மானங்கள் இந்த கூட்டத்தில் நிறை வேற்றப் பட்டது.

அதில் முக்கிய தீர்மானமாக மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களில் சிறந்த மண்டலமாக தண்டையார் பேட்டை மண்டலம் உருவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மேலும் 34, 42, 44, 48 ஆகிய வார்டுகளில் குப்பை மற்றும் கழிவுகள் கொட்டப்படுவதை கண்காணிக்கும் விதமாக 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமரா பொருத்துவது வியாசர்பாடி முல்லை நகர் மயானம் 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பராமரிக்கும் பணி நடைபெறுவது தண்டையார்பேட்டை நாவலர் குடியிருப்பு பகுதியில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல் லோகு கட்டிடம் கட்டப்படவும் வைத்தியநாதன் மேம்பாலம் பகுதியில் அலங்கரிக்கும் விதமாக பத்து லட்ச ரூபாய் மதிப்பீட்டில் வண்ண நீரூற்று அமைப்பது அழகு செடிகள் வைப்பது மேலும் மினி ஐ மாஸ் விளக்கு மின் கம்பங்கள் பழுதடைந்த கேபிள்கள் ஆகியவை புதுப்பிக்க 22 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ள துஒதுக்கப்பட்டுள்ளது மேலும் பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் பகுதி செயற்பொறியாளர் திருநாவுக்கரசு, குடிநீர் வாரிய அதிகாரிகள் சுகாதாரத் துறை அதிகாரிகள் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாநகராட்சி நிதிநிலை அறிக்கையின்படி

# மகளிர் முன்னேற்றத்திற்காக தையல் - கணினிப் பயிற்சி!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை,செப்.17-

மேயர் திருமதி ஆர். பிரியா , நேற்று (16.09.2024) புரசைவாக்கம், சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சமுதாய கல்லூரியில் மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மகளிர் முன்னேற்றத்திற்கான தொழில் பயிற்சியான தையல் மற்றும் கணினிப் பயிற்சியினை தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

இன்று (16.09.2024) மேயர் திருமதி ஆர். பிரியா , புரசைவாக்கம், சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள சமுதாய கல்லூரியில் மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மகளிர் முன்னேற்றத்திற்கான தொழில் பயிற்சியான தையல் மற்றும் கணினிப் பயிற்சியினை தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

முதற்கட்டமாக புரசைவாக்கத்தில் உள்ள சுந்தரம் தெருவில் இயங்கி வரும் சமுதாய வல்லூரியில் 200 மகளிருக்கான தையல், ஆரி எம்பிராய்டரி பயிற்சியும், 75 மகளிருக்கு கணினி பயிற்சி, அழகு கலை பயிற்சியும் துவங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக ஆழ்வார்பேட்டை சென்னை மேல்நிலைப் பள்ளியில் தொழிற் பயிற்சிக்கான பயிற்சி பெறுபவரின் (மகளிர்) சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இந்த சமுதாயக் கல்லூரிகளில் பயிற்சி 3 மாதம் முடிந்தவுடன் அனைத்து பெண்களுக்கும் பயிற்சி சான்றிதமும், உதவித்தொகை தலா ரூ.1,000/ வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார், அண்ணாநகர் மண்டலக் குழுத் தலைவர் கூ.பி ஜெயின், மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ந.பாலு தலைமை ! சொ. வேலு முன்னிலையில்

# 78 அ வட்டத்தில் கழக முப்பெரும் விழா! கொடியேற்றல் !

## கோ.ஏகப்பன்,எஸ். மணிமுடி பங்கேற்பு !

சென்னை செப்:17

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி கழக முப்பெரும் விழா மற்றும் பவள விழாவை முன்னிட்டு 78 அ வட்டத்தில் உள்ள கழக கொடி கம்பங்களில் கொடி ஏற்றும் நிகழ்ச்சி இன்று ( 17.9.2024 செவ்வாய்க்கிழமை ) காலை நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு வட்டக் கழக செயலாளர் ந. பாலு தலைமை ஏற்கிறார்.

பகுதி கழகச் செயலாளர், சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினர் சொ. வேலு முன்னிலை வகிக்கிறார்.

மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், எஸ். மணிமுடி, எம். ஆர். வெங்கடேசன்,கோ. மணி, பெ.ஏழுமலை, ஆகி யோர் கழக கொடியேற்றுகின்றனர்.

இதில் வட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ,கழக முன்னோடிகள்,மகளிர் அணியினர் பங்கேற்கி ன்றனர்.


கண்ணீர் அஞ்சலி

தோற்றம் : 03.05.1956 • மறைவு : 16.09.2024

M.D.சண்முகம்

தலைமை பொதுக்குழு உறுப்பினர்

உரிமையாளர் : S.K. FLOWER MERCHANT கோயம்பேடு

அவர்கள் 16.09.2024 திங்கள் கிழமை இன்று காலை 07.00 மணியளவில் இயற்கை எய்தினார். மேலும் அன்னாரின் இறுதி ஊர்வலம் 17.09.2024 செவ்வாய்கிழமை காலை 10.30 மணியளவில் அவர்களது இல்லத்தில் இருந்து புறப்பட்டு மண்ணிவாக்கத்தில் உள்ள மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தங்களுடன் தெரிவித்துகொள்கிறோம்.



ஆழ்ந்த வருத்தங்களுடன்

குடும்பத்தினர் & உறவினர்கள் மற்றும்

காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க